பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 07 2025 7 15

திங்கட்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சு வார்த்தைகள் வாஷிங்டனில் இன்று மீண்டும் தொடங்கவுள்ளன.

2. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நாடு விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

3. தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் ஓடும் ரயிலில் கர்ப்பிணி பெண்ணுக்கு பாலியல் தொல்லையை கொடுத்து கீழே தள்ளிய நபருக்கு 3 ஆயுள் தண்டனையுடன் வாழ்நாள் சிறைத்தண்டனை அளித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

5. மலேசிய ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Alia Kankaria** வெண்கலப் பதக்கம் வென்றார்.

--இனி விரிவான செய்திகள்-

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சு வார்த்தைகள் இன்று மீண்டும் தொடங்கவுள்ளன.

இந்தியாவின் சார்பில் தொழில் மற்றும் வர்த்தகம் சார்பிலான உயர்நிலைக் குழு வாஷிங்டனில் நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளது.

இந்த பேச்சுக்கள் 4 நாட்கள் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

>><><><><<

இந்திய- சீனா இடையேயான நல்லுறவு படிப்படியாக மேம்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக சீனா சென்றுள்ள அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு வாங் யி-யுடன் நடத்திய பேச்சுக்களின் போது இவ்வாறு கூறினார்.

கைலாஷ் மனோசரோவர் யாத்திரை ஐந்தாண்டுகளுக்கு பிறகு நடைபெறுவதை சுட்டிக்காட்டிய அவர், இதற்காக ஒத்துழைத்த சீன அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

இந்தியா – சீனா இடையேயான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டியதன் அவசியத்தையும் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

>><><><><<

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நாடு விரைவான வளர்ச்சியை கண்டுவருவதாக தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஒரு மாவட்டம் - ஒரு பொருள் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையிலும், நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா விரைவில் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் திரு பியூஷ்கோயல் கூறினார்.

>><><><<

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத் தொடர் வரும் 21 ஆம் தேதி தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்த மசோதா தொடர்பான கூடுதல் விவரங்களை விரைவில் தெரிவிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>><><><<

தூய்மை எரிசக்தி பயன்பாட்டுக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன்காரணமாக, பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பினை தடுப்பதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தூய்மை மின் உற்பத்திக்கான இலக்குகளை நிர்ணயிக்கப்பட்டதை விட 5 வருடங்களுக்கு முன்னதாகவே இந்தியா எட்டியுள்ளதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

>><><><<

ஆயுர்வேத சிகிச்சையின் மகிமையை உலகம் தற்போது உணர்ந்திருப்பதாக ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், ஆயுர்வேதத்தின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

>><><><<

ஹரியானா ஆளுநராக பேராசிரியர் அசின் குமார் கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் கோவா ஆளுநராக திரு **Pusapati** அசோக் கஜபதி ராஜூவும், லடாக் துணை நிலை ஆளுநராக திரு கவிந்தர் குப்தாவும், நியமிக்கப்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் மாளிகையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

மிசோரம் முதலமைச்சர் திரு **Lalduhoma** இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியை புதுதில்லியில் சந்தித்துப் பேசினார்.

மிசோரமின் வளர்ச்சிக்கான திட்டம் குறித்து பிரதமருடன் அவர் விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

கருத்து சுதந்திரத்தின் மதிப்பினை உணர்ந்து பொதுமக்கள் செயல்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு நாகரத்தினா, திரு விஸ்வநாதன் அமர்வு சுயகட்டுப்பாட்டுடன் கருத்துக்களை தெரிவிக்குமாறு அறிவுறுத்தியது.

சமூக வலைதளத்தில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்ததற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை எதிர்த்து திரு **Wazahat khan** தாக்கல் செய்த மனு விசாரணையின் போது உச்சநீதிமன்றம் இக்கருத்தினை தெரிவித்தது.

>><><><<

பழம்பெரும் நடிகை சரோஜாதேவி மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், பல்வேறு மொழிகளில் நடித்த பெருமைக்குரிய அவர், பன்முகத் திறன் கொண்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது நடிப்புத் திறன் தலைமுறைகளைத் தாண்டியும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>><><><<

மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ் ஐக்கிய அரபு எமிரேட்டின் அமைச்சர்களுடன் பேச்சு நடத்தினார்.

அரசுமுறைப் பயணமாக துபாய் சென்றுள்ள அவர், அந்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சருடன் பேச்சு நடத்தினார்.

ஜவுளி, மருந்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உணவுப் பதப்படுத்துதல் துறைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு அந்நாட்டு தொழிலதிபர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

மத்தியப்பிரதேசத்தில் தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலையை தமது அரசு ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு மோகன் யாதவ் கூறினார்.

>><><><<

சத்ரபதி சிவாஜி மகராஜ் தொடர்புடைய 12 கோட்டைகள் யுனெஸ்கோவின் புராதன சின்னங்களில் சேர்க்கப்பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நாவிஸ் கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இதில் 11 கோட்டைகள் மகாராஷ்டிராவிலும், ஒரு கோட்டை தமிழகத்திலும் உள்ளதாக குறிப்பிட்டார்.

>><><><<

தமிழகத்தில் ஓடும் ரயிலில் கர்ப்பிணி பெண்ணுக்கு பாலியல் தொல்லையை கொடுத்து கீழே தள்ளிய நபருக்கு 3 ஆயுள் தண்டனையுடன் வாழ்நாள் சிறைத்தண்டனை அளித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கினை விசாரணை செய்த திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி மீனா குமாரி, குற்றவாளி ஹேமராஜூக்கு 85 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரயில்வே துறை சார்பில் 50 லட்ச ரூபாயும், மாநில அரசு சார்பில் 50 லட்ச ரூபாயும் என 1 கோடி ரூபாய் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கான மருத்துவ செலவுகளை மாநில அரசே ஏற்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

தில்லியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இணைய தளம் வாயிலாக மாணவர் சேர்க்கைக்கான நடைமுறையை தொடங்கியுள்ளது.

தனியார் பள்ளிகளில் காலியாக உள்ள இடங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கையை தில்லி அரசு தொடங்கியுள்ளது.

இப்பிரிவு மாணவர்களுக்கு தனியார் பள்ளிகள் இடம் ஒதுக்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தில்லி அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இம்மாணவர்களுக்கு இலவச கட்டாய கல்வி 8 ஆம் வகுப்பு வரை அளிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

புதுச்சேரியின் புதிய அமைச்சராக பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஜான் குமார் இன்று பதவியேற்றார்.

ராஜ் நிவாசில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் மற்றும் அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக, புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினராக நியமிக்கப்பட்ட 3 பேர் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம் அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

>><><><<

மேகாலயாவில் **Behdeinkhlam** திருவிழா இன்று நடைபெற்றது.

**Jowai** -வில் நடைபெற்ற இந்த திருவிழாவில் கலாச்சாரம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை எடுத்துரைக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த திருவிழாவின் ஒரு பகுதியாக இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேகாலயாவின் கலாச்சாரத்தை இந்த திருவிழா எடுத்துரைப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

மத்திய – மாநில அரசுகள் இணைந்து இந்த திருவிழாவை நடத்தின.

>><><><<

வருமான வரிக் கணக்கு தாக்கல் தொடர்பான முறைகேடுகளை களையும் வகையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை வருமான வரித்துறை தொடங்கியுள்ளது.

நாடுமுழுவதும் இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடங்கியுள்ளதாக வருமான வரித்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த கண்காணிப்பு நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

உக்ரைனுக்கு **Taurus** ஏவுகணைகள் வழங்கப்பட மாட்டாது என்று ஜெர்மன் அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஜெர்மன் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு **Boris Pastorius** பிரிட்டன் நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஏவுகணை வழங்குமாறு உக்ரைன் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அவர் இக்கருத்தை கூறியுள்ளார்.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

மலேசிய ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Alia Kankaria** வெண்கலப் பதக்கம் வென்றார்.

11 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர், 13-11, 10-12, 10-12, 11-13, 11-8 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Tang Ching** -ஐ வென்றார்.

°-------------

16 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா 25-18, 26-24, 25-15 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவை வென்றது.

------------

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 193 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் இந்தியா சற்றுமுன் வரை 8 விக்கெட் இழப்புக்கு 138 ரன் எடுத்துள்ளது.

**>> End of News <<**